பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 09 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மனிதநேயத்தையும் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. மருத்துவத்துறையின் எதிர்காலம் நானோ மருந்துப் பொருட்களை சார்ந்ததாக இருக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. ராணுவத் தளவாட உற்பத்தி, பாதுகாப்புப் படைகளின் செயல்திறனை மேம்படுத்துவதாக அமைய வேண்டும் என்று ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் Dhiraj Seth தெரிவித்துள்ளார்.

4. காங்கோவில் கப்பல் மூழ்கி நேரிட்ட விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. குரேஷியாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anwesha Gowda தங்கப்பதக்கம் வென்றார்

>>>>>>><<<<<<<

நாட்டில், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மனிதநேயத்தையும் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

கேரளம் மாநிலம் அமிர்தபுரியில் நடைபெற்ற மாதா அமிர்தானந்தமயி பிறந்தநாள் விழாவில் பங்கேற்று பேசிய அவர், மனித வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதே உண்மையான சேவையாக கருதப்படும் என்று கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் போது, அரசின் சேவைகள் மற்றும் நலத்திட்டங்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமிர்தானந்தமயி மடத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியுதவி காரணமாக, சுமார் இரண்டரை லட்சம் ஏழைப் பெண்கள் புத்தொழில்களை தொடங்கி பயனடைந்திருப்பதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மருத்துவத்துறையின் எதிர்காலம் நானோ மருந்துப் பொருட்களை சார்ந்ததாக இருக்கும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

உலக நானோ மருத்துவ மாநாட்டில் பேசிய அவர், நவீன மருத்துவ அறிவியல் உலகில் நானோ மருந்துப் பொருட்கள் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்கும் என்றார்.

மருத்துவ சிகிச்சை என்பது அந்தந்த நபர்களுக்கு ஏற்படும் பாதிப்பின் அடிப்படையில், தனிப்பட்ட அணுகுமுறையை பின்பற்ற வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Cellular மற்றும் மூலக்கூறு அளவிலான ஆராய்ச்சிகள், இந்த மருத்துவ முறையில் ஏராளமான வாய்ப்புகளை வழங்கும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மகளிர் கல்வி, சமூக சமத்துவம் போன்றவற்றிற்காக, ராஜாராம் மோகன் ராய் ஆற்றிய பணிகள், சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூக சீர்திருத்தவாதி ராஜாராம் மோகன் ராயின் நினைவு தினத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, பிற்போக்கான பழக்க வழக்கங்களுக்கு மக்கள் ஆளாகியிருந்த காலகட்டத்தில், சமூக மாற்றத்திற்கு புதிய வழி காட்டியவர் அவர் எனவும் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசு மேற்கொண்டு வரும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் காரணமாக, உத்தரப்பிரதேசத்தின் ஏற்றுமதி அளவு, இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரிக்கும் என்று, மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்று வரும் உத்தரப்பிரதேச சர்வதேச வர்த்தக மாநாட்டில் பேசிய அவர், இம்மாநிலத்தின் ஏற்றுமதி, தற்போதைய 2 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 2030-ம் ஆண்டுக்குள் 5 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்றார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம், சந்தை அணுகுதல் எளிதாகியுள்ளதாக அவர் கூறினார். முதலீடுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பதன் வாயிலாக, உத்தரப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்த புதிய வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மாநில அரசின் கொள்கைகள், முதலீட்டாளர்களுக்கு உகந்தவையாக இருப்பதால், அன்னிய முதலீடுகள் பெருமளவு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும், திரு.பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>>><<<<<<<

மகாராஷ்ட்ராவில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த மூங்கில் சார்ந்த பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று அம்மாநில ஆளுநர் திரு Jishnu Dev Varma கேட்டுக்கொண்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற மூங்கில் குறித்த மாநாட்டில் பேசிய அவர், திரிபுராவில் மூங்கில் சார்ந்த தொழில்கள் சிறப்பான வளர்ச்சியை பெற்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

மகாராஷ்ட்ராவின் Gadchiroli உள்ளிட்ட மாவட்டங்களில் மூங்கிலை மூலப்பொருளாக கொண்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யவும் அதிக வாய்ப்பிருப்பதாக அவர் கூறினார்.

இதன்மூலம், உள்ளூர் விவசாயிகள் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் என்றும் திரு Jishnu Dev Varma தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசு மற்றும் பி.ஜே.பி. ஆளும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களை திசைதிருப்பும் நோக்கில், எதிர்க்கட்சிகள், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் தொடர்பான பிரச்சினையை எழுப்பி வருவதாக, தில்லி முதலமைச்சர் திருமதி.ரேகா குப்தா குற்றம்சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிம் பேசிய அவர், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் தொடர்பாக, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக  தலைமைத் தேர்தல் ஆணையரும், தேர்தல் ஆணையர்களும் விளக்கம் அளித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், தேர்தல் ஆணையம் மீதான எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு, ஆதாரமற்றது என்று நிரூபணமாகியிருப்பதாகவும் திருமதி. ரேகா குப்தா குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், நியூயார்க்கில், வெனிசுலா, பெலாரஸ், மெக்சிகோ, கனடா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்துப் பேசினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வெனிசுலா அமைச்சருடனான சந்திப்பு, எரிசக்தித்துறையில், இந்தியா – வெனிசுலா இடையேயான ஒத்துழைப்புக்கு வலு சேர்த்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடா அமைச்சர் திருமதி.அனிதா ஆனந்த் உடன் நடத்திய பேச்சுவார்த்தையில், இருதரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

மெக்சிகோ மற்றும் பெலாரஸ் வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்புகளும் ஆக்கபூர்வமாக அமைந்தது என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

ராணுவ தளவாட உற்பத்தி சுயசார்பு என்ற நிலையைத் தாண்டி, பாதுகாப்புப் படைகளின் செயல்திறனை மேம்படுத்துவதாக அமைய வேண்டும் என்று, ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் தீரஜ் சேத் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தற்கால போர்முறை மாற்றமடைந்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

போரின் தன்மை, தொழில்நுட்ப பயன்பாடு, போர் நடைபெறும் காலம் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால், பாதுகாப்புப் படையிரின் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மலை உச்சிகள் மற்றும் கடுங்குளிரிலும் வீரர்கள் பணிபுரியும் சூழல் உள்ளதை சுட்டிக்காட்டிய ஜெனரல் தீரஜ் சேத், ட்ரோன் தாக்குதல்கள் புதிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளன என்றும் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ரம்மி விளையாட்டு செயலியுடன் தொடர்புடையவர்களின் 442 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

இது தொடர்பாக நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனைகளின் தொடர்ச்சியாக, Gameskraft Technologies நிறுவனம் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு சொந்தமான, வங்கி வைப்பு நிதி, வணிக வளாகங்கள், குடியிருப்புகள் முடக்கப்பட்டிருப்பதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

சட்டவிரோத பணப் பரிவர்த்தனை குற்றச்சாட்டின் பேரில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், இதுவரை மொத்தம் 2 ஆயிரத்து 843 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் முடக்கப்பட்டிருப்பதாகவும் அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

காங்கோ-வில் கப்பல் மூழ்கி நேரிட்ட விபத்தில் அதில் பயணம் செய்த 12 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் மாயமாகியுள்ளனர்.

மீன் வியாபாரிகள் 50 பேருடன் பயணம் செய்த அந்த கப்பல், அந்நாட்டின் தென்பகுதியில் உள்ள Kivu மாகாணத்தில் உள்ள ஒரு தீவு அருகே மூழ்கியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை 15 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சியவர்களை தேடும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

கேரளத்தின் கடலோர மாவட்டங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்று ஆழ்கடல் தகவல் சேவைகளுக்கான தேசிய மையம் எச்சரித்துள்ளது.

கடற்பகுதியில் அலைகள் மிக உயரமாக எழக்கூடும் என்பதால், கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அந்த மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்காரணமாக, அம்மாநிலத்தில் மீனவர்கள் நாளை வரை கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

லட்சத்தீவு மற்றும் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்ட கடல்பகுதியிலும் இதேநிலை காணப்படும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

குரேஷியாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anwesha Gowda தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 21-10 என்ற செட்கணக்கில் பல்கேரியாவின் Gergana Pavlova-வை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

உஸ்பெகிஸ்தானின் Samarkhant-ல் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா ஓப்பன் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் பிரிவில் வெண்கலப்பதக்கதையும் வென்றது.

>>>>>>><<<<<<<

இந்தியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 217 ரன்னுக்கு ஆட்டமிழந்தது

ராஜ்கோட்டில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்துள்ளது.

>>>>>>><<<<<<<

வெஸ்ட் இண்டீஸ்-க்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 296 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 10 புள்ளி இரண்டு ஓவரில் விக்கெட் இழப்பின்றி 71 ரன் எடுத்துள்ளது.

திருவனந்தபுரத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 295 ரன் எடுத்தது.

>>>>>>><<<<<<<

ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று, நான்கு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>>END<<<<<<<